# Agricultural Economics

News Based Assignment

By

C.Gothavari

I BA Economics

2017-18

K. Kal

Subject Handled by Dr. K. Kaliammal
Associate Professor of Economics.

Scanned by CamScanner



# வேளாண்மை செய்திகள்



## நிலக்கடலை சாகுபடி

நிலக்கடலை விதைப்புக்கு முன்னர் ப்ளுகுளோரலின் எக்டருக்கு 2 லிட்டர் வீதம் மண்ணில் தெளிக்கவும். களை முளைப்பதற்கு முன் விதைத்த 3-ம் நாள் ப்ளுகுளோரலின் 2 லிட்டரை 500 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும். தொடர்ந்து பாசனம் செய்யவும். விதைத்த 35-40-ம் நாள் கைக்களை எடுக்க வேண்டும்.

களைக்கொல்லி உபயோகிக்க வில்லை என்றால் களைகளை மண்வெட்டி கொண்டு விதைத்த 20 மற்றும் 40 -ம் நாள் களை எடுக்க வேண்டும். 2-வது கைக்களை எடுத்த பின் மண் அணைக்க வேண்டும். இது நிலக்கடலையில் ஒரு முக்கியமான நடவடிக்கை ஆகும். விதைத்த 40-45-ம் நாள் மண் அணைப்பதன் மூலம் முளைகள் மண்ணிற்குள் செல்வது தடுக்கப்படும் மற்றும் காயின் வளர்ச்சிக்கு உதவுகிறது. ஜிப்சம் ஒரு எக்டருக்கு 400 கிலோ வீதம் 40-45 வது நாளில் பாசன பயிருக்கும், 75-வது நாளில் மானாவாரி பயிருக்கும் செடிகளின் ஓரமாக மண்ணின் ஈரத்தன்மையை பொறுத்து இட வேண்டும்.

### ஜிப்சம்

மண்ணை கொத்தி ஜிப்சம் இட்டு மண் அணைக்க வேண்டும். கால்சியம் மற்றும் கந்தக குறைபாடுள்ள நிலங்களில் ஜிப்சம் இடுதல் நல்ல பலனை தரும். ஜிப்சத்தின் மொத்த அளவில் பாதியை ரசாயன உரங்களுடன் அடியுரமாக இடுவதால் மானாவாரி மற்றும் இறவைப் பயிரில் நாற்புழுக்களால் ஏற்படும் காளஹஸ்தி மெலடி மற்றும் நிலக்கடலையில் உண்டாகும் சொறி போன்ற பாதிப்புக்களை குறைக்க முடியும்.

கால நிலைகளை பொறுத்து வளர்ச்சி நிலையின் போது 0.4 ஆவியாதல் வீதமும், பெருக்க நிலையின் போது 0.6 ஆவியாதல் வீதமும் உள்ளவாறு நிர்ணயிக்கப்படுகிறது. கீழ்கண்ட பயிரின் வளர்ச்சி நிலைக்கேற்ப நீர்பாசனத்தை கட்டுப்படுத்த வேண்டும். முளைப்பு, பூத்தல், காய் உருவாதல் ஆகிய பருவங்களில் நீர்பாசனம் இன்றியமையாதது ஆகிறது. ஏனெனில் இந்த நிலையில் மண்ணில் ஈரப்பதம் அவசியமானது.

### நீர்பாய்ச்ச வேண்டும்

நிலக்கடலைக்கு விதைத்தல் அல்லது விதைப்பதற்கு முன் மண் கடின அடுக்கை உடைக்க விதைத்த 4 அல்லது 5 நாட்களில் நீர்பாய்ச்ச வேண்டும். விதைத்த 20 நாட்களுக்கு பிறகு பூப்பிற்கு பின் 2 முறை நீர்பாய்ச்ச வேண்டும். முளைப்பு பருவத்தின் போது 1 அல்லது 2 முறை நீர் பாய்ச்ச வேண்டும். பூப்பின் போதும், காய் உருவாதலின் போதும் 0.5 சதவீதம் பொட்டாசியம் குளோரைடு தெளிப்பது நீர் தட்டுப்பாட்டை குறைக்கும்.

தெளிப்பு நீர் பரசனம் 30 சதவீதம் வரை நீரை சேமிக்க உதவுகிறது. லேசான மண் நயமுடைய நிலங்களுக்கு பாத்தியோர பாசனம் பரிந்துரை செய்யப்படுகிறது. முதிர்ந்த இலைகள் காய்ந்து விடுதல், மற்றும் மேல்மட்ட இலைகள் மஞ்சள் ஆவதும் முதிர்ச்சியை குறிக்கும்.

Scanned by CamScanner

# சோளப்பயிருக்கு மண் பரிசோதனை

சோளப்பயிருக்கு மண்பரிசோதனை பரிந்துரைப்படி தழைச்சத்து, மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்து இட வேண்டும். மண் பரிசோதனை பரிந்துரைக்க வில்லையென்றால் பொது பரிந்துரையாக எக்டருக்கு 90 கிலோ தழைச்சத்து, 45 கிலோ மணிச்சத்து மற்றும் 45 கிலோ சாம்பல் சத்து என்ற அளவில் இட வேண்டும். முழு அளவு மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்து நடுவதற்கு முன் அளிக்க வேண்டும். விதைத்தவுடன், 15-வது நாள் மற்றும் 30-வது நாளில் நைட்ரஜன் 50:25:25 சதவீதம் அளிக்க வேண்டும். முழு அளவு மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்து நடுவதற்கு முன் அளிக்க வேண்டும். வரப்பு பயிரில் 5 சென்டி மீட்டர் ஆழத்தில் வரப்பின் ஓரத்தில் பள்ளம் தோண்டி குழித்து உரக்கலவையை இட்டு 2 சென்டி மீட்டர் அளவுக்கு மண் கொட்டி மூட வேண்டும்.

நடவு வயலில் ஒரு எக்டருக்கு 2 கிலோ அசோஸ்பைரில்லம் மற்றும் 2 கிலோ பாஸ்போ பாக்டீரியா அல்லது 4 கிலோ அசோபோஸை 25 கிலோ தொழுஉரம், 25 கிலோ மணலுடன் கலந்து நடவுக்கு முன் இட வேண்டும். நுண் உரக்கலவை 12½ கிலோவை போதுமான மணலுடன் கலந்து ஒரு எக்டருக்கு 50 கிலோ அளவில் வரப்பில் இட வேண்டும். விதைத்த 3-5 ம் நாட்களில் களை முளைக்கும் முன் ஏக்கருக்கு ¼ கிலோ அட்ரசின் அளிக்கவும். அதைத்தொடர்ந்து விதைத்த 30-35ம் நாளில் 2 சக்கர களையெடுக்கும் கருவி மூலம் களை எடுக்க வேண்டும். நடவு பயிரில் விதைத்த 3-5 ம் நாளில் களை முளைக்கும் முன் அட்ரசின் ஏக்கருக்கு ¼ கிலோ அளிக்கவும். அதைத் தொடர்ந்து விதைத்த 20-25-ம் நாளில் 24-டி எக்டருக்கு 1 கிலோ அளிக்கவும்.

முதல் அரையாண்டில்

# உரங்கள் விற்பனை 3% சரிவு

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

கொல்கத்தா

நடப்பு நிதி ஆண்டின் முதல் அரையாண்டில் (ஏப்ரல்-செப்டம்பர்) உரங்கள் விற்பனை 3 சதவீதம் சரிவடைந்துள்ளது.



## இரண்டு பருவங்கள்

நம் நாட்டில் இரண்டு பருவங்களில் பயிர் சாகுபடி நடைபெறுகிறது. கரீப் பருவம் ஜூன் மாதம் தொடங்கி அக்டோபர் மாதத்தில் நிறைவடைகிறது. நாட்டின் மொத்த நெல் உற்பத்தியில் இப்பருவத்தின் பங்கு அதிகமாக இருக்கிறது. அக்டோபர்-மார்ச் மாத காலம் ரபி பருவமாகும். இப்பருவத்தில் கோதுமை அதிகம் சாகுபடி செய்யப்படுகிறது. கரீப் பருவ சாகுபடி பணிகள் தென்மேற்கு பருவமழையை நம்பியும், ரபி பருவ விவசாய பணிகள் வடகிழக்கு பருவ மழையையும் சார்ந்து நடைபெறுகின்றன.

நடப்பு ஆண்டில் தென்மேற்கு பருவமழை திருப்திகரமாக இருந்தும் உரங்கள் விற்பனை குறைந்துள்ளது. முதல் அரையாண்டில் மொத்தம் 2.78 கோடி டன் உரங்கள் விற்பனை ஆகி இருக்கிறது. சென்ற ஆண்டின் இதே காலத்துடன் ஒப்பிடும்போது இது 3 சதவீதம் குறைவாகும்.

நம் நாட்டில் யூரியா உர பயன்பாடு மிக அதிகமாக உள்ளது. கணக்கீட்டுக் காலத்தில் யூரியா விற்பனை 7 சதவீதம் சரிந்து 1.44 கோடி டன்னாக குறைந்துள்ளது. 100 சதவீதம் வேம்பு தடவிய யூரியா எனும் விதிமுறை அமல் படுத்தப்பட்டதே இதற்கு முக்கிய காரணம் என்று கூறப்படுகிறது. அதே சமயம் விலை குறைந்ததால் மற்ற உரங்கள் விற்பனை அதிகரித்துள்ளது. இதுவும் யூரியா விற்பனை குறைய ஒரு காரணமாக இருந்திருக்கிறது.

முதல் அரையாண்டில் பொட்டாஷ், பாஸ்பேட் போன்ற மற்ற உரங்கள் விற்பனை 3 சதவீதம் உயர்ந்து 1.34 கோடி டன்னாக உள்ளது. ஆனால் யூரியா விற்பனை அதிகம் சரிந்ததால் ஒட்டுமொத்த அளவில் அனைத்து உரங்களின் விற்பனையும் 3 சதவீதம் குறைந்துள்ளது.

## சாகுபடி இலக்கு

நடப்பு ரபி பருவத்தில் (அக்டோபர்-மார்ச்) 6.38 கோடி ஹெக்டேரில் பயிர் சாகுபடி மேற்கொள்ள மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. டிசம்பர் 2 நிலவரப்படி 4.36 கோடி ஹெக்டேர் பரப்பளவில் சாகுபடி நிறைவடைந்துள்ளது.

Scanned by CamScanner

**கிணத்துக்கடவு பகுதியில்**

# சொட்டுநீர் பாசனம் மூலம் வாழை சாகுபடி செய்யும் விவசாயிகள்

கிணத்துக்கடவு,டிச.22-

பருவமழை பொய்த்து போனதால் கிணத்துக் கடவு பகுதியில் சொட்டுநீர் பாசனம் மூலம் விவசாயிகள் வாழை சாகுபடி செய்துள்ளனர்.

## விவசாயம்

கிணத்துக்கடவு மற்றும் அதன் சுற்று வட்டார கிராமங்களான கோதவாடி, கொண்டம்பட்டி, கோடங்கிபாளையம், நல்லட்டிபாளையம், நெம்பர்10.முத்தூர், தேவராயபுரம், சொக்கனூர், சிங்கையன் புதூர், வடபுதூர் உள்பட 50-க்கும் மேற்பட்ட கிராமங்களில் விவசாயம் பிரதான தொழிலாக இருந்து வருகிறது. கிணத்துக்கடவு மேற்கு பகுதியில் வாய்க்கால் பாசன வசதிகள் இல்லாததால் பருவமழையை நம்பியே இப்பகுதி விவசாயிகள் விவசாயம் செய்து வருகின்றனர்.

இதனால் இந்த பகுதியில் அதிக அளவு தக்காளி, பொறியல் தட்டை பயிறு, பச்சை மிளகாயம், அவரைக்காய், பருத்தி, நிலக்கடலை, வாழை உள்பட பல்வேறு காய்கறி மற்றும் பயிறு வகை றுகளை விதைத்து விவசாயிகள் அறுவடை செய்து வந்தனர்.

## கடும் வறட்சி

இந்த ஆண்டு கிணத்துக்கடவு மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில் தென்மேற்கு, வடகிழக்கு பருவமழைகள் சரிவர பெய்யாமல் போனதால் கிராம பகுதியில் கடும் வறட்சி நிலவி வருகிறது. கிணறுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகளும் தண்ணீர் இன்றி வறண்டு காணப்படுகிறது. மேலும் பருவமழையை நம்பி பல இடங்களில் மானாவாரி நிலத்தில் பயிரிட்ட காய்கறி, பயிறு வகை செடிகள் தண்ணீர் இன்றி கருகி வருகிறது. இதனால் இனிமழையை நம்பி விவசாய பணிகளை மேற்கொள்ள முடியாது என்று முடிவு செய்த விவசாயிகள் ஏற்கனவே பயிரிட்டுள்ள காய்கறி மற்றும் வாழைகளை பாதுகாக்க சொட்டுநீர் பாசனத்தை அமைக்க தொடங்கி விட்டனர்.



**வாழைகளுக்கு தண்ணீர்விட சொட்டுநீர் பாசன குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளதை படத்தில் காணலாம்.**

## சொட்டுநீர் பாசனம்

மேலும் பல இடங்களில் விவசாயிகள் மழை பெய்யாததால வாடிய பயிறுவகை செடிகளை கால்நடைகளுக்கு தீவனமாக வழங்கி வருகின்றனர். இதுகுறித்து கிணத்துக்கடவு பகுதியை சேர்ந்த விவசாயிகள் கூறியதாவது:-

இந்த ஆண்டு பருமழை எதிர்பார்த்த அளவு கிடைக்கும் என நினைத்து விவசாய பணிகளை தீவிரமாக மேற்கொண்டு வந்தோம். ஆனால் தென்மேற்கு, வடகிழக்கு ஆகிய 2 பருவமழைகளும் கிணத்துக்கடவு மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் பெய்யாமல் போனதால் கடனை வாங்கி விவசாயத்தை மேற்கொண்ட எங்களுக்கு கடும் நஷ்டம் ஏற்பட்டு உள்ளது. இதனை அதிகாரிகள் ஆய்வு செய்து எங்களுக்கு நிவாரண தொகை வழங்க வேண்டும். ஆனாலும் ஒருசில பகுதிகளில் சொட்டுநீர் பாசனம் மூலம் வாழை, தக்காளி உள்ளிட்டவைகளை பயிரிட்டு உள்ளோம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.



குப்பை கிடங்கில் அமைக்கப்பட்டு உள்ள எந்திரத்தை நகராட்சி கமிஷனர் முருகேசன் மற்றும் அதிகாரிகள் பார்வையிட்டு ஆய்வு செய்ததையும், அங்கு நடவு செய்யப்பட்டுள்ள மூங்கில் மரக்கன்றுகளையும் படத்தில் காணலாம்.

Scanned by CamScanner

# விவசாயிகளுக்கு உதவும் கிஸான் அழைப்பு மையம்



விவசாயிகளின் பிரச்சினைகள், கேள்விகளுக்கு சிறந்த தீர்வை சொல்லும் ஓர் தகவல் தொடர்பு மையமே கிஸான் அழைப்பு மையம். விவசாயம் குறித்த அனைத்து சந்தேகங்களுக்கும், புதிய கண்டுபிடிப்பு மற்றும் தொழில்நுட்பம் குறித்த தகவல்களுக்கும் அவரது சொந்த மொழியில் சிறப்பான தீர்வு மற்றும் ஆலோசனைகளை வழங்குகிறது கிஸான் அழைப்பு மையம்.

வேளாண்மை நமது நாட்டின் முதுகெலும்பாக திகழ்கிறது. எனவே வேளாண்துறை அறிஞர்கள் மூலம் விவசாயிகளுக்கு எழும் பிரச்சினைகளை உடனடியாக தீர்க்கும் வகையில் கிஸான் அழைப்பு மையம் உதவுகிறது.

**கிஸான் அழைப்பு மையத்தின் சிறப்புகள்:**

விவசாயத்துறையில் ஏற்படும் பல ஆராய்ச்சிகள், கண்டுபிடிப்புகளை விட அதனை விவசாயிகளுக்கு எடுத்து சொல்வதில் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அதாவது ஒரு விவசாயிக்கும் மற்றொரு விவசாயிக்கும் செய்திகளை படிப்பதில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் மேம்பாட்டு துறை உதவுகிறது.

இதன் முக்கிய பணி விவசாயிகளிடம் கருத்து கேட்பது தான். அதாவது தொலைபேசி வழி தகவல் தொழில்நுட்பம் மூலம் விவசாயிகளுக்கு தேவையான தகவல் உடனுக்குடன் தரப்படுகிறது.

அதுபோல் இதில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட தகவல்களும் சேமித்து வைக்கப்படுகிறது.

விவசாயிகளுக்கு தேவையான தகவல்கள் வழங்கப்பட கட்டணம் ஏதும் கிடையாது. இலவசமாய் அவர்கள் விரும்பிய வண்ணம் தகவல் அளிப்பதே சிறப்பு.

இதற்கென பிரத்யேகமாக 1551 என்ற நான்கு இலக்க எண் வழங்கப்பட்டுள்ளது. இந்த எண் மூலம் நமது நாட்டின் எந்த மூலையிலிருந்தும் விவசாயி தொலைபேசி மூலம் அழைத்து தங்கள் சந்தேகங்களை கேட்கலாம்.

விவசாயி கேட்கும் சந்தேகத்திற்கான சேவையை வேளாண் பட்டதாரி அந்தந்த ஊர் சொந்த மொழியிலேயே பதில் அளிப்பார்.

இச்சேவைக்கென 13 தொலைபேசி நிலையங்கள் நிறுவப்பட்டு. 116 பல்வேறு மொழி புலமை பெற்ற வேளாண் பட்டதாரிகள் பணியில் உள்ளனர். இரண்டாம் கட்டமாக விளக்கமளிக்க 123 வல்லுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**கிஸான் அழைப்பு மையம் செயல்படும் முறை:**

கிஸான் அழைப்பு மையம் என்பது தகவல் தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் வேளாண் தொழில்நுட்பம் ஆகிய இரண்டு நுட்பம் மூலம் செயல்படுகிறது. குறை தீர்க்கும் மையம் மூன்று பகுதிகளாக செயல்படுகிறது. முதல், இரண்டு, மூன்றாம் நிலை அடிப்படையில் விவசாயின் அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிக்கப்பட்டு விடும்.

**முதல் நிலை:**

முதல் நிலையில் விவசாயி அழைக்கும் அழைப்பு தொழில் நிபுணரால் எடுக்கப்படும். பின் வரவேற்பு செய்தி அளிக்கப்பட்டு விவசாயின் கேள்விகள் என்னவென்று கேட்கப்படும். இந்த உரையாடல்கள் கணினியில் பதியப்படும். முதல்நிலை நிபுணர் வேளாண்பட்டதாரி என்பதுடன் உள்ளூர் மொழி அறிந்த நிபுணராகவும், விவசாயின் பெரும்பான்மை சந்தேகத்தை தீர்க்கக்கூடியராக இருப்பார்.

**இரண்டாம் நிலை:**

முதல் நிலையில் தீர்க்க முடியாத சந்தேகங்களுக்கு இவர் தீர்வு அளிப்பார். இவர் வேளாண்கல்லூரி (அ) ஆராய்ச்சி நிலைய சிறப்பு அறிஞராக இருப்பர். முதல் நிலையில் இருந்த இவருக்கு இணைப்பு தொடர்பளிக்கப்படும். அதுபோல் கணினியில் உள்ள கேள்விகளும் இவருக்கு அனுப்பப்படும். அவர் அதற்குரிய பதிலை அளிப்பார்.

**மூன்றாம் நிலை:**


முதல் இரண்டு நிலையில் பதிலளிக்க முடியாத கேள்விகள் இங்கு அனுப்பப்படும். இங்கு அறிஞர்களால் ஆய்வு செய்யப்பட்டு, பதில் தொலைபேசி, தொலைபிரதி, மின்னஞ்சல் ஏதேனும் ஓர் வழியில் 72 மணி நேரத்தில் அவருக்கு அனுப்பி வைக்கப்படும்.

இந்திய விவசாயிகளுக்கு பேருதவி புரியும் கிஸார் அழைப்பு மையம் வேளாண் துறையும், விவசாயமும், விவசாயிகளும் நல் வளர்ச்சி பெறுவது உறுதி செய்யப்படுகிறது.

Scanned by CamScanner



பொள்ளாச்சி மார்க்கெட்டில் பூக்கள் விற்பனைக்காக குவித்து வைக்கப்பட்டுள்ளதை படத்தில் காணலாம்.



காந்தி மார்க்கெட்டில் விற்பனைக்காக வைக்கப்பட்டு உள்ள காய்கறிகளை படத்தில் காணலாம்.

### பொள்ளாச்சியில் கடும் பனிப்பொழிவு:

# மார்க்கெட்டுக்கு பூக்கள், காய்கறிகள் வரத்து குறைந்தது

பொள்ளாச்சி,டிச.31-

பொள்ளாச்சி பகுதியில் கடும் பனிப்பொழிவு நிலவுவதால் மார்க்கெட்டுக்கு பூக்கள், காய்கறிகள் வரத்து குறைந்தது.

**காய்கறி மார்க்கெட்**

பொள்ளாச்சி காந்தி மார்க்கெட்டுக்கு திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், உடுமலை, ஊட்டி, மேட்டுப்பாளையம், பெங்களூரு மற்றும் பொள்ளாச்சி சுற்று வட்டார பகுதிகளில் இருந்து காய்கறிகள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. இதில் பீன்ஸ், கேரட், பீட்ரூட், உருளைகிழங்கு போன்ற காய்கறிகள் ஊட்டி, மேட்டுப்பாளையம், பெங்களூருரில் இருந்து வருகின்றன.

கத்தரிக்காய், தக்காளி, வெண்டைக்காய் போன்ற நாட்டு காய்கறிகள் பொள்ளாச்சி, திண்டுக்கல் பகுதிகளில் இருந்து வருகின்றன. மார்க்கெட்டுக்கு நாட்டு காய்கறிகள் தினமும் 50 டன் வரை விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன.

**விலை அதிகரிப்பு**

இங்கிருந்து காய்கறிகள், பூக்கள் பக்கத்து மாநிலமான கேரளாவுக்கு அதிகளவு லாரிகள் மற்றும் சரக்கு வாகனங்களில் கொண்டு செல்லப்படுகின்றன. இதை தவிர உள்ளூர் வியாபாரிகளும் வாங்கி சென்று, சில்லரை விலைக்கு விற்பனை செய்கின்றனர்.

தற்போது மார்க்கெட்டுக்கு காய்கறிகள் வரத்து குறைந்து உள்ளது. இதனால் கடந்த சில நாட்களாக காய்கறிகள் விலை உயர்ந்து காணப்படுகின்றன. இதனால் வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**காய்கறிகள் விலை நிலவரம்**

காந்தி மார்க்கெட்டில் நேற்றைய காய்கறிகள் விலை விபரம் வருமாறு (ஒரு கிலோ):-

கத்திரிக்காய் ரூ.15-க்கும், தக்காளி ரூ.6-க்கும், கேரட் ரூ.30-க்கும், பீர்க்கன்காய் ரூ.15-க்கும், பாகற்காய் ரூ.25-க்கும், புடலைங்காய் ரூ.15-க்கும், வெண்டைக்காய் ரூ.25-க்கும், பூசணி ரூ.5-க்கும், அரசாணிக்காய் ரூ.10-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

**விளைச்சல் குறைந்தது**

இதுகுறித்து காய்கறி வியாபாரிகள் கூறியதாவது:-

பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு நாட்டு காய்கறிகளான கத்திரிக்காய், தக்காளி, வெண்டைக்காய் உள்பட பல்வேறு காய்கறிகள் தினமும் 15 டன்னுக்கும் அதிகமாக கொண்டு வரப்படும். ஆனால் தற்போது பனிக்காலம் நிலவுவதால் காய்கறிகள் விளைச்சல் குறைந்து உள்ளது.

இதனால் 7 டன் முதல் 10 டன் வரை தான் காய்கறிகள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றது. இதனால் விலை உயர்ந்து காணப்படுகின்றது. தை மாதத்திற்கு பிறகு பனிக்காலம் குறைந்தால் தான், மார்க்கெட்டுக்கு காய்கறிகள் வரத்து அதிகரிக்கும். வழக்கமாக காய்கறிகள் வரத்து குறைந்து இருந்தால் விலை அதிகரித்து காணப்படும். ஆனால் தற்போது கிராமங்களில் வாரச்சந்தைகள் செயல்படுவதால் மார்க்கெட்டுக்கு வியாபாரிகளின் வருகை குறைந்து விட்டது. இதற்கிடையில் பண பட்டுவாடா மற்றும் சில்லறை பிரச்சினை காரணமாக விற்பனை மந்தமாக உள்ளது. இதனால் காய்கறிகள் வரத்து குறைந்தும் விலை அதிகரிக்கவில்லை.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**பூக்கள்**

பொள்ளாச்சி தேர் நிலையில் உள்ள பூ மார்க்கெட்டுக்கு திண்டுக்கல், மதுரை, நிலக்கோட்டை, கோவை, பெங்களூரு மற்றும் பொள்ளாச்சி சுற்று வட்டார பகுதிகளில் இருந்து பூக்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. இந்த நிலையில் கடந்த சில நாட்களாக கடும் பனிப்பொழிவு காரணமாக பூக்கள் வரத்து குறைந்து உள்ளது. இதனால் விலை உயர்ந்து காணப்படுகிறது.

கிலோவுக்கு மல்லிகை பூ ரூ.1000 முதல் ரூ.1100 வரையும், சம்பங்கி ரூ.50 முதல் ரூ.70 வரையும், செவ்வந்தி ரூ.50 முதல் ரூ.60 வரையும், கோழிக்கொண்டை ரூ.50 முதல் ரூ.60 வரையும், செண்டு மல்லி ரூ.50, தாமரை ரூ.10, அட்டை பெட்டியில் வைக்கப்பட்டு உள்ள 22 பூக்கள் கொண்ட ரோஸ் பூ ரூ.130-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

**மல்லிகை பூ**

இதுகுறித்து பூ வியாபாரிகள் கூறியதாவது:-

நவம்பர், டிசம்பர், ஜனவரி மாதங்களில் கடும் பனிப்பொழிவு நிலவும். இந்த மாதங்களில் மார்க்கெட்டுக்கு பூக்கள் வரத்து குறைவாக இருக்கும். வழக்கமாக தினமும் 3 டன் பூக்கள் வரை கொண்டு வரப்படும்.

ஆனால் பனியின் காரணமாக பாதியாக குறைந்து 1 டன் பூக்கள் தான் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. இதில் மல்லிகை பூ வரத்து மிகவும் குறைந்து விட்டது. இதனால் கிலோ ரூ.1000 வரை விற்பனை ஆனது. பொள்ளாச்சியில் இருந்து அதிகளவு கேரளாவுக்கு பூக்கள் கொண்டு செல்லப்படுகிறது. இதை தவிர உள்ளூர் வியாபாரிகளும் வாங்கி செல்கின்றனர். பிப்ரவரி மாதத்திற்கு பிறகு பூக்கள் வரத்து அதிகரித்தால், தான் விலை குறைய வாய்ப்பு உள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## காய்கறி மகசூல் 10 சதவீதம் பாதிப்பு

### அதிகாரி தகவல்

பனிக்காலங்களில் காய்கறி பயிர்களின் விளைச்சல் குறைந்தும், பூக்கள் செடியிலேயே உதிர்ந்தும் விடுகின்றன. இதுகுறித்து வேளாண்மைத்துறை அதிகாரிகள் கூறியதாவது:-

பொள்ளாச்சி பகுதியில் தென்னை சாகுபடி அதிகமாக உள்ளது. அதற்கு அடுத்தபடியாக பொள்ளாச்சி, ஆனைமலை, கிணத்துக்கடவு, வடக்கிபாளையம் போன்ற கத்தரிக்காய், வெண்டைக்காய், புடலங்காய், பாகற்காய் போன்ற பல்வேறு காய்கறிகள் பயிரிடப்பட்டு உள்ளன. தற்போது பனிப்பொழிவின் காரணமாக விளைச்சல் பாதிப்படைந்துள்ளது.

காய்கறி செடிகளில் சூரிய ஒளியின் மூலம் இலைகள் உணவு தயாரிக்கின்றன. பனிக்காலத்தில் சூரிய ஒளி சரிவர இலையின் மீது படாததால், செடிகளுக்கு பாதிப்பு ஏற்படும். மேலும் பனிப்பொழிவின் போது வைரஸ் நோய் தாக்குதல் ஏற்படும். இதனால் வழக்கத்தை விட 10 சதவீதம் மகசூல் குறைந்து விடும். இதேபோன்று கடும் பனிப்பொழிவுக்கு தாக்குப்பிடிக்க முடியாமல், பூக்கள் செடியிலே உதிர்ந்து விடுகின்றன. இதனால் தற்போது காய்கறிகள் மற்றும் பூக்கள் வரத்து மார்க்கெட்டுக்கு குறைந்து விடும்.


இதனால் விலை அதிகரிக்கும். அதன்பிறகு பனி படிப்படியாக குறைய தொடங்கி பிறகு, காய்கறிகள் விளைச்சல் அதிகரிக்கும்.

தற்போது தக்காளி மற்றும் பந்தல் காய்கறிகள் பயிரிடப்பட்டு உள்ளன. மற்ற காய்கறி பயிர்கள் அறுவடை முடிந்துள்ளது. பனிக்காலத்தில் தக்காளியை இலைக்கருட்டு நச்சு நோய் தாக்கும். இந்த நோயை கட்டுப்படுத்த கார்போபியூரான் எனும் குருனை மருந்தை மணலில் கலந்து தூவ வேண்டும். இந்த மருந்தை தோட்டக்கலை துறை அதிகாரிகளின் பரிந்துரையின் பேரில் விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

Scanned by CamScanner

# ஒருங்கிணைந்த பண்ணை முறையின் சிறப்பம்சம்



ஒருங்கிணைந்த பண்ணை என்பது விவசாயிகளின் வருவாய் பெருக்குவது மற்றும் விவசாய பொருட்களின் தன்னிறைவு அடையப் பொருட்டு உருவாக்கப்பட்ட ஒரு புதிய பண்ணை முறை.

நாட்டில் நாள்தோறும் விவசாய நிலப்பரப்பின் அளவு குறைந்து கொண்டே வருகிறது. அதற்கேற்ப குறைந்த விவசாய இடத்தில் பல ஒருங்கிணைந்த விவசாய பணிகளை மேற்கொண்டு வேளாண் தொழில் மேம்பட ஒருங்கிணைந்த பண்ணை முறை உதவுகிறது.

அதாவது விவசாய நிலங்களில் பயிர் சாகுபடியை மட்டும் மேற்கொள்ளாமல் அத்துடன் கறவை மாடு வளர்ப்பு, மீன்வளர்ப்பு, கோழி வளர்ப்பு, ஆடு, காடை வளர்ப்பு, காளான் வளர்ப்பு என்றவாறு சில உபதொழில்களை இணைத்து விவசாயத்தை செய்வதே ஒருங்கிணைந்த பண்ணை முறை.

**ஒருங்கிணைந்த பண்ணையின் நன்மைகள்:**

விவசாயிகளுக்கு ஆண்டு முழுவதும் தொடர்ந்து வருமான வாய்ப்பு உறுதி செய்யப்படுகிறது. விவசாய பணியாளர்களுக்கு தொடர் வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது. பண்ணை பொருட்கள் மற்றும் பண்ணை கழிவுகளை சிறப்பாக அளவில் சுழற்சி செய்வது. பண்ணை கழிவுகளை மீண்டும் வயலின் இடுவதின் மூலம் நிலத்தின் வளம் காக்கப்படுவதுடன், இயற்கை உரத்தின் மூலம் மகசூல் அதிகரிக்கிறது. அதிகப்படியான உரச் செலவும் மிச்சப்படுத்தப்படுகிறது. ஒட்டு மொத்தமாக விவசாய பண்ணை மூலமாக மொத்த வருமான அதிகரிக்க ஒருங்கிணைந்த பண்ணை பேருதவி புரிகிறது.

**ஒருங்கிணைந்த பண்ணை அமைக்கும் போது கவனிக்க வேண்டியவை**

ஒருங்கிணைந்த பண்ணை முறையில் திட்டம் வகுத்திடும் போது நன்செய், புன்செய், தோட்டங்களுக்கு ஏற்ற பயிர் வளர்ப்பு திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். அந்த பயிர் வகைக்கு ஏற்றபடி உற்ற உபதொழிலை தேர்ந்தெடுப்பது. உப தொழில்கள் ஒன்றை ஒன்று சார்ந்திருத்தல் வேண்டும்.

ஒருங்கிணைந்த பண்ணையின் உபதொழில்களுக்கு ஏற்ற இடு பொருட்கள் அங்கேயே உற்பத்தி செய்திட வேண்டும். உபதொழிலில் கிடைக்கும் கழிவுபொருள் மற்ற உபதொழிலுக்கு பயன்படும் நோக்கிலேயே தொழில்களை தேர்வு செய்ய வேண்டும்.

ஒருங்கிணைந்த பண்ணை திட்டத்தில் பயிர் சுழற்சி முறையில் பயிரிடுதல் வேண்டும். முதல் போகம் நெல், இரண்டாம் போகம் பயிறு மூன்றாம் போகத்தில் மக்காசோளம் என்ற சுழற்சி முறை பயிர் சாகுபடியாக இருப்பது நன்மை பயக்கும்.

**பயிர்சாகுபடியின் ஊடே மீன் வளர்ப்பும், கோழி வளர்ப்பும்.**

ஒருங்கிணைந்த பண்ணை அமைப்பு முறையில் மீன் வளர்ப்பு ஓர் அங்கம். எனவே 10 சென் நிலம் மீன் வளர்ப்பு குட்டைக்கும். 90 சதவீதம் பயிர் சாகுபடிக்கும் பயன்படுத்தலாம். கோழி வளர்ப்பு தீவனமாக நெல்சாகுபடியில் கிடைத்த பதர் நெல்லை தவிடு ஆக மாற்றி தரலாம்.

. மூன்றாம் போக மக்காச்சோளத்தையும் கோழி தீவனமாக பயன்படுத்தி கொள்ளலாம். இதன் மூலம் கோழி தீவனச்செலவு எழுபது சதவீதம் குறைகிறது.

அதுபோல் கோழியின் கழிவு மீன்களுக்கு சிறந்த உணவு. மீன் வளர்ச்சிக்கு உகந்த ஏராளமான சத்துக்கள் கோழி கழிவுகளில் உள்ளது. 400 கலப்பின் மீன்குஞ்சுகளுக்கு 20 கோழிகள் போதுமானது.

**ஒருங்கிணைந்த பண்ணையத்தில் மேலும் சில உபதொழில்கள்:**

நெல் பயிரிலிருந்து கிடைக்கும் வைக்கோல், மக்காச்சோள கதிர் சக்கை கொண்டு காளான் வளர்க்கவும், கறவை மாடு 2 முதல் 3 வரை வளர்க்கலாம். மேலும் 100 சதுர அடி பரப்பளவில் 500 காடை குஞ்சுகள் என்றவாறு வளர்த்தல் மாதம் ரூ. 5000/- வரை வருவாய் பெறலாம். நெல் வயலில் மீன் வளர்ப்பதன் மூலம் பூச்சிகள். களைகள் மீன்களுக்கு இரையாகும். ஒரு ஏக்கர் நெல்வயலில் 500 கிலோ வரை மீன் வளர்க்க முடியும்.



திருவள்ளூர் மாவட்டம், உரக்காடு கிராமத்தில் சேதமடைந்த நெற்பயிர்களை மத்திய குழுவினர் பார்வையிடும் காட்சி.

Scanned by CamScanner

# ஆடு வளர்ப்பது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி

சுல்தான்பேட்டை, டிச.25–

சுல்தான்பேட்டை ஒன்றியம் பாப்பம்பட்டியில் லாபகரமாக ஆடு வளர்ப்பது குறித்து பண்ணை பள்ளி பயிற்சி நடந்தது. இதற்கு வேளாண்மை உதவி இயக்குனர் கிருஷ்ணவேணி தலைமை தாங்கினார். கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குனர் பெருமாள்சாமி கலந்து கொண்டு பேசும் போது, ஆடுகள் வளர்ப்பு, கிராமப்புற விவசாயிகளுக்கு உபரி வருமானத்தை ஈட்டி தருவதாக உள்ளது. ஆடு வளர்ப்பில் தீவன மேலாண்மை மிக முக்கிய பங்கு வகிக்கிறது. ஒரு வளர்ந்த வெள்ளாட்டுக்கான பசுந்தீவனம் 4 கிலோ முதல் 5 கிலோ வரை கொடுக்க வேண்டும். அடர்தீவனம் குட்டி மற்றும் வளர்ந்த ஆட்டுக்கு தேவையான அளவு தான் வழங்க வேண்டும். குறிப்பாக மேய்ச்சல் குறைவான காலங்களில் அடர்தீவனத்துக்கு பதிலாக வேறு தீவனங்களை வழங்க வேண்டும் என்றார். இதில் 30 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

பயிற்சி வகுப்பில் பாப்பம்பட்டி அரசு கால்நடை உதவி மருத்துவர் செல்வராணி, லட்சுமி நாயக்கன்பாளையம் கால்நடை உதவி மருத்துவர் உமா மகேஸ்வரி உள்பட பலர் கலந்து கொண்டனர். முன்னதாக வட்டார அட்மா தொழில்நுட்ப மேலாளர் மலர்விழி வரவேற்று பேசினார். முடிவில் உதவி தொழில்நுட்ப மேலாளர் ராஜேஷ்குமார் நன்றி கூறினார்.

**வ**ருகிற புத்தாண்டில் ஏற்றுமதி வளர்ச்சி வேகம் கூடும் என மத்திய தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் நிர்மலா சீதாராமன் நம்பிக்கை தெரிவித்தார். (டிசம்பர் 19)

**ந**டப்பு 2016– 2017 வேளாண் பருவத்தில் (ஜூலை–ஜூன்) நெல், கோதுமை உள்ளிட்ட உணவு தானியங்கள் உற்பத்தி 27 கோடி டன்னாக உயரும் என



மத்திய வேளாண் அமைச்சகம் மதிப்பீடு செய்தது. (டிசம்பர் 22)

**ந**டப்பு 2016–ம் ஆண்டில் பரஸ்பர நிதித் திட்டங்களில் தனிநபர்களின் முதலீடு ரூ. 6.24 லட்சம் கோடியை எட்டியது. (டிசம்பர் 24)


Scanned by CamScanner





தேயிலை தோட்டத்தில் உலா வரும் காட்டு யானைகளையும், அவைகள் சேதப்படுத்தியதால் சமையல் அறையில் உள்ள பாத்திரங்கள் சிதறி கிடப்பதையும் படத்தில் காணலாம்.

Scanned by CamScanner



# இயற்கையின் வரம் முருங்கைக்கீரை

கீரைகள் உணவாக மட்டுமின்றி மருந்தாகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதனால் தான் உணவே மருந்து, மருந்தே உணவு என்று நம் முன்னோர் கூறியுள்ளனர்.

நாகரிக உலகில், கீரை சமைப்பதை வேலைப் பளுவாக கருதும் பெண்கள் அதிகரித்து விட்டனர். விளைவு, கீரைகளின் மூலம், இயற்கையாக நம் முன்னோர் பெற்று வந்த பல்வேறு மருத்துவ பயன்பாடுகள், நமக்கு கிடைக்காத சூழல் ஏற்பட்டு விட்டது.

கீரைகளில், பணம் கொடுக்காமல், பக்கத்து வீடுகளில் ஓசிக்கு கிடைக்கும் கீரை முருங்கை. இது, செலவே இல்லாமல், உடலுக்கு அதிக பலன் தரக்கூடியது. இந்த கீரையும், அதன் பூக்களும், இயற்கை மனிதர்களுக்கு கொடுத்த வரம் எனலாம். அந்தளவுக்கு, அதில் பயன்கள் நிரம்பியுள்ளன.

முருங்கை கீரையில் வைட்டமின் ஏ, பி, சி, புரதம், இரும்புச் சத்து உள்ளது. முருங்கை இலைகளில் அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள் மற்றும் தாதுக்கள் அடங்கி உள்ளன. வைட்டமின்கள் பி, சி, கே, புரோ விட்டமின் ஏ என்னும் பீட்டா கரோட்டின், மாங்கனீசு, மற்றும் புரதம் போன்ற அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள் கணிசமாக இருப்பதால் ஊட்டச் சத்து உணவாக பரிந்துரைக்கப்படுகிறது.

முருங்கை இலையை எடுத்த பின் மிஞ்சிய காம்புகளை மட்டும் நறுக்கி மிளகு சேர்த்து ரசம் வைத்து உட்கொள்ள கை, கால், அசதி நீங்கும். முருங்கைக் கீரையை வெள்ளரி விதையுடன் அரைத்து வயிற்றின் மேல் கனமாகப் பூச நீர்க்கட்டை உடைத்து சிறுநீரை பெருக்கும்.

முருங்கை கீரையை உணவுடன் அதிகம் வேகவிடாத பொரியலாக சமைத்து உண்ண கழுத்து வலி படிப்படியாக நிவாரணம் கிடைக்கும். முருங்கைக் கீரையுடன் எள் சேர்த்து சமைத்து சாப்பிட நீரிழிவு நோய் குணமாகும். பிசின் சதை நரம்புகளைச் சுருங்கச் செய்து தும்மல் உண்டாக்கும். நாள்பட்ட கோழை, காய்ச்சல், நஞ்சு ஆகியவற்றைப் போக்கும்; வியர்வையைப் பெருக்கும்.

# விவசாயிகளுக்கு உதவும் புதிய உபகரண தோழன்

மஹிந்திரா டிராக்டர்ஸ் நிறுவனம் கடந்த அறுபது ஆண்டுகளாக விவசாய துறையில் செழிப்பு ஏற்படுத்தும் விதமாக விவசாய உபகரண பிரிவின் வாயிலாக மிக சிறந்த தொழில்நுட்ப எந்திரங்களை வழங்குவதில் முன்னோடியாக உள்ளது. இந்நிறுவனம் 33 ஆண்டுகளுக்கு மேலாக சந்தையில் முதலிடத்துடன் சுமார் 2.5 மில்லியன் வாடிக்கையாளருடன் ஒவ்வொரு தலை முறை விவசாயிகளுக்கும் அவர்களது கனவுகளை பயிரிட உதவிபுரிந்து வருகிறது.

இந்நிறுவனத்தின் முதன்மை துணைதலைவர் (மார்க்கெட்டிங்) ரவீந்திர ஷகானே விவசாயி தினத்திற்கு என விவசாயிகளுக்கு வாழ்த்து தெரிவித்தார். "அதாவது இந்த விவசாயிகள் தினத்தில், அயராது பணிபுரிந்து தேசத்திற்கே உணவளிக்கும் விவசாயிகளுக்கும் உதவும் வண்ணம் அவர்களுக்கு சிறந்த பண்ணை தொழில்நுட்பத்தை வழங்குவதுடன் எங்களது இதய பூர்வமான நன்றியையும் தெரிவிக்கிறோம்'' என்றார்.

மஹிந்திரா டிராக்டர்ஸ் தனது வாடிக்கையாளரின் தேவை மற்றும் உள்நோக்கம் அறிந்து அதற்கேற்ற நவீன உபகணரங்களை வழங்கி எவரும் தொட முடியாத சாதனையை நிகழ்த்தி உள்ளது.

மஹிந்திராவின் அர்ஜூன் நோவா அதுபோல் புதிய வரவாக உள்ளது. புதிய தலைமுறை விவசாயிகளுக்கு ஏற்ற சிறந்த தயாரிப்பாக உள்ளது.

அர்ஜூன் நோவா சென்னையில் உள்ள மஹிந்திரா ஆராய்ச்சி வளாகத்தில் மிக அழகிய வடிவமைப்புடன் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள அனைத்து விவசாயிகளின் தேவையறிந்து தொழில்நுட்ப வசதிகளுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

100-க்கும் மேற்பட்ட சிறந்த பொறியாளர்களின் கடின உழைப்பில் இரவு பகல் அயராது பணி செய்து இந்த தொழில்நுட்ப உபகரணம் உருவாகியுள்ளது. மஹிந்திராவின் அர்ஜூன் எட்டு மாநிலங்களில் 90க்கும் மேற்பட்ட பிரிவிகளில் அதன் இயக்க சோதனை செய்து வெற்றிபெற்றது. அர்ஜூன் நோவா 3HP பாயிண்ட்களில் கிடைக்கிறது. 49.9.HP, 52HP மற்றும் 57HP என்றவாறு 4 வீல் டிரைவ், ஏசி கேபின் மற்றும் கிரிப்பர் போன்றவை உள்ளது.

2,200 கிலோ லிப்ட் செய்யும் வசதி, சிறந்த எரிபொருள் சேமிப்பு திறன், உயர்தர நவீன சின்கிரோமெஷ் டிரான்ஸ்மிஷன், 30 வேக ஆப்ஷன்கள், சிறப்பாய் அமரும் வசதி, 5 வருட என்ஜின் வாரண்டி என்ற வெவ்வேறு சிறப்பம்சங்களுடன் மஹிந்திரா அர்ஜூன் நோவா கிடைக்கிறது.


விவசாயிகளுக்கு ஓர் வரப்பிரசாதம்

IS : 12818
CM/L : 6229668

PVC பைப் உற்பத்தியில் வெள்ளி விழா கண்ட நிறுவனம்

IS : 4985
CM/L : 2362145





BHAVANI

பிளம்பிங் & போர்வெல் கேசிங் பைப்ஸ்

பாலிடஃப் டியூப்ஸ் லிமிடெட்

பாண்டி : 94426 21075, 99942 09591 ; காரைக்கால் : 89038 76715 ;
பட்டுக்கோட்டை : 04373 254513 ; விருதாசலம் : 93443 68875
புதுக்கோட்டை : 94433 68875 ; பரமக்குடி : 94430 90598
தஞ்சாவூர் : 93441 18875 ; மன்னார்குடி : 94876 08875
கும்பகோணம் : 97863 86644 ; திருச்சி : 94422 68875 ;
கோயம்புத்தூர் : 93800 04747 ; மதுரை : 93817 04747 ;
நாகர்கோவில் : 96009 25333 ; அரக்கோணம் : 97872 52548 ;
வேலூர் : 93607 30301

தொடர்பு கொள்ள : 97910 33346


Scanned by CamScanner



■ பொள்ளாச்சி ஆ.சங்கம்பாளையம் பகுதியில் இல்லத்தரசி சத்தியராணி, வீட்டு மொட்டை மாடியில் அமைத்துள்ள காய்கறி தோட்டம்.

# இரண்டும் கலந்த நெல்நடவு துவக்கம்



■ ஆனைமலை அடுத்த காரப்பட்டி, ஆனக்குழிவயல் பகுதியில், நெல் நடவு துவங்கியுள்ளது.

ஆழியாற்றிலிருந்து நெல் விவசாயத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இதையடுத்து, ஆனைமலை ஒன்றிய பகுதிகளில் விவசாயிகள் திக்கால்நடவு எனப்படும் பாரம்பரிய நடவு முறையை பின்பற்றி நெல் சாகுபடி செய்து வந்தனர். ஆனால், தற்போது பெரும்பாலான விவசாயிகள் பாரம்பரிய நடவு முறை மட்டுமின்றி, புதிய தொழில்நுட்பமான, கயிற்றை கட்டிவிட்டு குறிப்பிட்ட அளவு இடைவெளியில் நாற்று நடவு செய்யும் வரிசை நடவு முறையில் ஈடுபட்டு வருகின்றனர். அதேபோல் சில பகுதிகளில் இயந்திர நடவிலும் ஆர்வம் காட்டிவருகின்றனர். மேலும், வேளாண் துறை சார்பில் நெல் விவசாயிகளுக்கு நெல் விதை, உரம் உள்ளிட்டவை மானியத்தில் வழங்கப்படுவதால் விவசாயிகள் ஆர்வத்துடன் மீண்டும் நெல் சாகுபடியில் களமிறங்கியுள்ளனர்.

நெல் விவசாயி பட்டீஸ்வரன் கூறுகையில், " ஆழியாறு அணையிலிருந்து தண்ணீர் கிடைத்துள்ளதால், 11 ஏக்கரில் அரசு மானியத்தில், கோ – 51 நெல் ரகம் விலைக்கு வாங்கி திக்கால் நடவு மற்றும் வரிசை நடவு முறை

Scanned by CamScanner

# சின்னவெங்காயம் அழுகி நாசம்: கோவை விவசாயிகள் 'கண்ணீர்'

**கோவை, செப். 21–**

கோவை புறநகர் பகுதியிலுள்ள விவசாய நிலங்களில் விளைவித்து சேமித்து வைக்கப்பட்ட, 1,000 டன் சின்ன வெங்காயம் அழுகி நாசமானது. இதனால், பல லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் சோகத்துடன் கூறுகின்றனர்.

கோவை மாவட்டத்தில், தொண்டாமுத்தூர், ஆனைமலை, ஆலூர், பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியங்களில் சின்ன வெங்காயம் பயிர் செய்யப்படுகிறது. பயிர்க்காலம் 60 நாட்கள். இந்த கால கட்டத்தில் அறுவடை செய்யப்பட்டு, விற்பனைக்கு கொண்டு செல்லப்படும்.

நல்ல விலை கிடைக்கும் என்ற நம்பிக்கையில், வெங்காயத்தை, வெயிலில் உலர்த்தி, பதப்படுத்தி, விவசாய நிலத்தில், பட்டறை போன்ற அமைப்பு ஏற்படுத்தி, அதில் சின்ன வெங்காயத்தை விவசாயிகள் இருப்பு வைக்கின்றனர்.

இந்த பட்டறை, ஆறு முதல் எட்டு அடி அகலமும், 200 அடி நீளமும் கொண்டது. மழை நீர் உள்ளே நுழையாமல் இருக்க, மரச்சட்டங்களை கொண்டும், பாலித்தீன் தார்பாய்களை கொண்டும் போர்த்தி, விவசாயிகள் பாதுகாக்கின்றனர்.



கோவையில் கடந்த 15 நாட்களாக தொடர்ந்து பெய்த கனமழையால், வெங்காயப்பட்டறையிலும் வெள்ளம் சூழ்ந்தது. வெங்காயம் அழுகி நாசமானது.

தொண்டாமுத்தூர் ஒன்றியத்தில், 500க்கும் மேற்பட்ட விவசாயிகள் தலா, நான்கு, ஐந்து ஏக்கர்களில் சின்ன வெங்காயம் பயிர் செய்துள்ளனர். அதே போல், பெரியநாயக்கன்பாளையம், ஆலூர் ஒன்றியங்களிலும் விவசாயிகள் சின்ன வெங்காயம் பயிர் செய்துள்ளனர். அவர்கள் பட்டறையில் சேமித்து வைத்த சின்ன வெங்காயம் அழுகி நாசமானது.

தொண்டாமுத்தூர் விராலியூரை சேர்ந்த விவசாயி பெரியசாமி கூறுகையில், ''நல்ல விலை கிடைக்கும் என்று நம்பி சேமித்து வைத்தோம். இடைவிடாது பெய்த மழையால், விவசாய நிலத்தில் மழை நீர் தேங்கியது. பட்டறையில் மழைநீர் புகுந்தது. இருப்பு வைத்த வெங்காயம் அழுகி நாசமானது. என்னைப்போல், நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது,'' என்றார்.

வேளாண் அதிகாரி ஒருவர் கூறுகையில், 'வேளாண்துறைக்கு சொந்தமான கிடங்கில் விளைபொருட்களை வைத்தால், அதற்கு நாங்கள் இன்சூரன்ஸ் மூலம் இழப்பீடு கொடுக்கலாம்.

'விவசாயிகள் சொந்த விளைநிலத்தில் வைத்த விளைபொருளுக்கு நாங்கள் பொறுப்பேற்க முடியாது. விளைநிலத்திலேயே சேதம் ஏற்பட்டிருந்தால் கூட, அதற்கும் இன்சூரன்ஸ் உள்ளது. அதை பயன்படுத்தி இழப்பீடு கோரலாம்' என்றார்.

Scanned by CamScanner

# பணம் கொழிக்கும் பப்பாளி சாகுபடி

## சொட்டு நீரினால் கொட்டுகிறது

இறவை தண்ணீர் உள்ள பகுதியில், பப்பாளி சாகுபடி செய்து, பால் மற்றும் பழங்கள் உற்பத்தி செய்து, அதன்மூலம் கணிசமான வருவாய் ஈட்டலாம் என, விவசாயிகளுக்கு தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

உடுமலையில் பெரும்பாலும் தென்னையே அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வரும் நிலையில், மாற்று பயிர் திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என அதிகாரிகள் தெரிவித்து வருகின்றனர்.




இதையடுத்து, விவசாயிகள் மாற்றி யோசித்து சிறந்த வருமானம் கிடைக்கும் பயிர்களையும், சொட்டுநீர் பாசனம் முறையை பின்பற்றி குறுகியகால பயிர்கள் மற்றும் தண்ணீர் குறைவாக தேவைப்படும் பயிர்களை சாகுபடி செய்ய வேண்டும், என தோட்டக்கலைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, மருத்துவ குணங்கள் நிறைந்த பால் மற்றும் பழங்களுக்கு அதிகளவு வரவேற்புள்ள பப்பாளி சாகுபடி செய்து சிறந்த வருவாய் ஈட்டலாம் என்று தெரிவிக்கின்றனர்.

உடுமலை, தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் இளங்கோவன் கூறியதாவது: தோட்டக்கலை பயிரான பப்பாளி ஒருமுறை சாகுபடி செய்தால் தொடர்ந்து, 2 ஆண்டுகள் வரைக்கும் பலன் கிடைக்கும் வாய்ப்புள்ளது.

நல்ல பதியம் போடப்பட்ட நாற்றுகளை ஏக்கருக்கு, 800 நாற்றுகள் வீதம், மேட்டுப்பாத்திகள் அமைத்து, ஒவ்வொரு செடிக்கும் இடையில், 7 அடி இடைவெளி இருக்கும் வகையில் நடவு செய்ய வேண்டும்.

சொட்டுநீர் பாசனம் அமைத்து தினமும் ஒரு செடிக்கு, 12 முதல், 15 லிட்டர் தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது.

தண்ணீர் பாசன திட்டத்தால் குறைந்தளவு தண்ணீர் இருந்தாலும் விவசாயிகள் எந்தவித பாதிப்புமின்றி சாகுபடியை மேற்கொள்ளலாம். செடிகள் நன்கு வளர்ந்து நிழல் கொடுக்கும் வரை அதிகளவில் களைகள் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளதால், வாரம் ஒருமுறை களையெடுக்க வேண்டியது அவசியமாகும்.

குறிப்பாக பப்பாளி சாகுபடியில் பராமரிப்பு மிகவும் முக்கியம். ஏனெனில் காய்களில் நோய் தாக்குதல் அதிகம் வரும் என்பதால் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மேலாண்மையை கடைபிடிக்க வேண்டும்.



உடுமலை அடுத்த, சோமவாரப்பட்டியில் சொட்டுநீர் பாசனமுறையில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பப்பாளி.

பப்பாளி பழத்தில் பல் வேறு மருத்துவ குணங்கள் நிறைந்துள்ளதால், பொதுமக்களிடையே பயன்பாடும் அதிகரித்துள்ளது.

அதுமட்டுமில்லாமல் அதன் காய்களை சமையலில் பயன்படுத்தப்பட்டு வருவதால் நுகர்வு செய்யப்படுகிறது.

நடவு செய்த ஐந்தாவது மாதத்தில் இருந்து பூக்க ஆரம்பிக்கும் பப்பாளி மரங்கள், 8 வது மாதத்தில் இருந்து காய்கள் பால் எடுப்பதற்கு தயாராகிறது.

காய்களை முழுமையாக முற்றவிடாமல், முக்கால் நிலையில் இருக்கும் போது பால் எடுக்க வேண்டும். அப்போது தான் காய்களில் பால் சுரக்கும் தன்மை அதிகளவில் காணப்படுவதால் கூடுதலாக கிடைக்கும் வாய்ப்புள்ளது. பால் வடித்து எடுப்பதற்கு வசதியாக மரத்தை சுற்றிலும் வட்ட வடிவில் கவர் பயன்படுத்த வேண்டும். சிறு கத்தியால் காய்களின் கீறிவிட வேண்டும். காய்ந்ததும் வடியும் பாலை சேமிப்பதற்கு போடப்பட்டுள்ள கவரில் சேர்த்து வழித்தெடுத்து கொள்ளலாம்.

இதன் பால் உடனே கெட்டியாகிவிடும் என்பதால், காலை வெயில் வருவதற்கு முன் எடுக்க வேண்டும். போதுமான தண்ணீர் இருந்தால் செடிகள் வளர்ச்சி நன்றாக இருப்பதுடன், காய்களிலும் அதிகளவில் பால் கிடைப்பதற்கு வாய்ப்புகள் உள்ளது. இரண்டு நாட்களுக்கு ஒருமுறை பால் எடுக்கலாம். இவ்வாறு, தெரிவித்தார்.

### நல்ல விலை

பப்பாளி மரங்களில், தொடர்ந்து, 40 நாட்கள் வரை பால் எடுத்த பின், காய் அல்லது பழமாக விற்பனை செய்து கொள்ளலாம். நாளொன்றுக்கு ஏக்கருக்கு, 30 கிலோ வரை பால் கிடைக்கும் வாய்ப்புள்ளது.

ஆண்டுக்கு ஒரு ஏக்கரில், 700 முதல் ஆயிரம் கிலோ பப்பாளி பாலும்; 40 முதல், 50 டன் வரைக்கும் பழங்களும் கிடைத்து வருகிறது.

ஒரு கிலோ பப்பாளி பால், 115 ரூபாய்க்கும்; பழங்கள் குறைந்தபட்சம், 10 ரூபாய்க்கும் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

Scanned by CamScanner

# விவசாயிகளின் வருவாய் உயர்த்த திட்டம்

## தமிழகத்திற்கு முக்கியத்துவம்

– நமது நிருபர் –

விவசாயிகளின் வருமானத்தை இரு மடங்காக அதிகரிக்கும் திட்டத்தில், தமிழகத்தையும், மத்திய அரசு சேர்த்துள்ளது.

வறட்சி, வெள்ளம், புயல் உள்ளிட்ட இயற்கை காரணங்களால், நாடு முழுவதும் வேளாண் தொழில் பாதிக்கப்பட்டு, விவசாயிகள் நஷ்டத்திற்கு ஆளாகின்றனர்.

கடன் பிரச்னை, மகசூல் குறைவு உள்ளிட்ட காரணங்களால், விவசாயிகள் தற்கொலை செய்வது, அதிர்ச்சியில் இறக்கும் சம்பவங்கள், நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தி உள்ளன.

இதற்கு தீர்வு காணும் வகையில், விவசாயிகளின் வருமானத்தை இரு மடங்காக அதிகரிக்கும் திட்டத்தை, மத்திய அரசு செயல்படுத்த உள்ளது.

இதன்படி, 2022க்குள், விவசாயிகளின் வருவாய் இரு மடங்காக உயரும் என, எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டத்தில், தமிழகத்திற்கு, மத்திய அரசு முக்கியத்துவம் அளித்துள்ளது.

இது குறித்து, தமிழக வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:



இந்தாண்டு, அசாம், பீஹார், ஜார்க்கண்ட், ம.பி., மஹாராஷ்டிரா, ராஜஸ்தான், தமிழகம், உ.பி., மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில், விவசாயிகளின் வருமானத்தை இரு மடங்காக அதிகரிக்கும் திட்டம், செயல்படுத்தப்பட உள்ளது.

பிரதமர் பெயரிலான, பல்வேறு வேளாண் மேம்பாட்டு திட்டங்களும் செயல்படுத்தப்படும். இதற்காக, ஒவ்வொரு மாநிலத்திற்கும், பல கோடி ரூபாய் செலவிடப்பட உள்ளது.

தென் மாநிலங்களில், தமிழகம் மட்டுமே இத்திட்டத்தில் இடம் பெற்றுள்ளது.

மத்திய அரசு, தமிழக விவசாயிகள் மீது அதிக அக்கறை காட்டுவதையே இது காட்டுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

# ரூ.4 கோடியில் மென்பொருள் வாங்குகிறது மின் வாரியம்

– நமது நிருபர் –

தகவல் தொழில்நுட்ப சேவைகளை பாதுகாக்க, நான்கு கோடி ரூபாய் செலவில், நவீன மென்பொருள் வாங்க, மின் வாரியம் முடிவு செய்துள்ளது.

மின் கட்டணம், புதிய மின் இணைப்பு விண்ணப்பம் உள்ளிட்ட சேவைகளை பெற, மக்கள், மின் வாரிய இணையதளத்தை பயன்படுத்துகின்றனர்.

அதை பராமரிக்கும் ஒப்பந்த நிறுவனம், சில மாதங்களுக்கு முன், மின் வாரிய சர்வரை முடக்கியது. இதனால், மின் கட்டணம் வசூலிக்கும் பணி முடங்கியது.

இந்த பிரச்னைகளை தவிர்க்க, நவீன மென்பொருள் வாங்க, மின் வாரியம் முடிவு செய்துள்ளது.

இதுகுறித்து, மின் வாரிய அதிகாரி ஒருவர் கூறியதாவது:

தகவல் தொழில்நுட்ப விபரங்களை பாதுகாப்பாக வைக்குமாறு, மத்திய மின் துறை அமைச்சகத்திடம் இருந்து, தொடர்ந்து அறிவுறுத்தல்கள் வருகின்றன.

மின் வாரியம், தற்போது, பயன்படுத்தி வரும் கம்ப்யூட்டர் மற்றும் இணையதள சேவைகளுக்கான பாதுகாப்பு மென்பொருள், 2010ல் நிறுவப்பட்டது.

இதற்கு மாற்றாக, கம்ப்யூட்டர் தகவல்களை பாதுகாக்க, அடுத்த தலைமுறைக்கான நவீன பாதுகாப்பு மென்பொருள் வாங்கப்பட உள்ளது. இதன் மதிப்பு, நான்கு கோடி ரூபாய்.

இது, பொது மக்கள், மின் வாரியம் இடையிலான இணைய சேவைகளையும், மின் வாரியத்திற்குள் நடக்கும் அனைத்து கம்ப்யூட்டர் தகவல்களையும் பாதுகாக்கும்.

இதனால், பல நாடுகளை அச்சுறுத்திய, 'ரேன்சம்வேர்' போன்ற எந்த வைரஸ்களாலும், தனி நபராலும், வாரிய சர்வரை முடக்க முடியாது.

இவ்வாறு அவர் கூறினார்.

Scanned by CamScanner



# முட்டைகோஸ் தரும் தெம்பு!

முட்டைகோஸ், எளிதில் கிடைக்கும் விலை குறைந்த காய்கறிகளில் ஒன்று. உடலுக்கு நன்மை தரும் சத்துக்கள், இதில் ஏராளம் உள்ளன. கால்சியம், மெக்னீசியம், இரும்பு, பாஸ்பரஸ், அயோடின், வைட்டமின்கள் மற்றும் போலிக் அமில்ம் அதிகம் உள்ளன.

அதில் கனமான வெள்ளைத் தண்டை நீக்கி சாப்பிடுவது நல்லது. முட்டைக்கோசை சிறிதாக நறுக்கி நீர் விட்டு அலசி, பின் சிறிது எண்ணெய் விட்டு வதக்கி உணவில் சேர்த்துக் கொண்டால், சர்க்கரை நோயின் தாக்கம் குறையும். இதை வேகவைக்காமல் பச்சையாகவும் சாப்பிடலாம்.

முட்டைகோஸை, நீரில் கொதிக்க வைத்து சாறெடுத்து பருகுவதால், உடலுக்கு பல நன்மைகள் கிடைக்கின்றன. அதிகமான ஆல்கஹால் அருந்துவதால் செரிமான மண்டல இயக்கம் தடைபடுகிறது. குடலில் இருக்கும் நல்ல பாக்டீரியாக்களை ஆல்கஹால் அழிப்பதால், அத்தியாவசிய வைட்டமின் மற்றும் மினரல்கள், உடலுக்கு கிடைப்பது தடைபடுகிறது.

முட்டைகோஸ் சாறு, செரிமான மண்டலத்தை சுத்தப்படுத்தி, உடலில் இருந்து நச்சுக்களை வெளியேற்றுகிறது. தினமும் காலையில் வெறும் வயிற்றில், ஒரு டம்ளர், முட்டைகோஸ் சாறு பருகுவது உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் என, ஊட்டச்சத்து நிபுணர்கள் கூறுகின்றனர்.

முட்டைகோஸ் சாறு, அழகை அதிகரிப்பதிலும், முகத்துக்கு வசீகரம் அளிப்பதிலும் முக்கிய பங்காற்றுகிறது. சருமத்தில் தீங்கு விளைவிக்கும் கூறுகளான ப்ரீ ரேடிக்கல்களிடம் இருந்து சருமத்தை பாதுகாத்து, பருக்கள் மற்றும் கரும்புள்ளிகள் தோன்றாமல் தடுக்கிறது. முக வறட்சி மற்றும் வயது முதிர்வை தடுத்து, பொலிவாக்குகிறது. முட்டைகோஸ் சாறு பருகுவதால், தலைமுடியின் வேர்கள் பலமடையும். முடி உதிர்தல் குறைந்து வலிமையாகும். நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது. சளி மற்றும் இருமல் குறைகிறது.

முட்டைகோசுடன் சிறிது சின்னவெங்காயம், பச்சை மிளகாய், கறிவேப்பிலை, கொத்தமல்லி கலந்து நன்கு வதக்கி சாப்பிட்டு வந்தால் மலச்சிக்கல் இல்லாமல் இருக்கும். உடலில் இனம்புரியாத நோய்கள் ஏற்படுவதற்கு பித்த மாறுபாடே காரணம். உடலில் பித்த நீர் அதிகம் சுரந்து அவை பல இன்னல்களை உண்டாக்கும். முட்டைகோஸை அடிக்கடி உணவில் சேர்த்துவந்தால் பித்தம் சீரான நிலையில் இருக்கும். சிலர் அதிக உடல் எடையால் அவஸ்தைப்படுவார்கள். இவர்கள் முட்டைகோஸை சூப் செய்து அருந்தி வந்தால் பருத்த உடல் இளைக்கும்.

Scanned by CamScanner





■ கூடலூர், புளியம்பாறை கோழிகொல்லி ஆதிவாசி கிராமத்தில், காளான் உற்பத்திக்காக அமைக்கப்பட்டுள்ள 'பிளாஸ்டிக்' குடில். ■ குடிலில் காளான்களை பராமரிக்கும் பெண்.

யாக மாறி உள்ளனர்.

நீலகிரி ஆதிவாசி நலச் சங்கத்தின் பயிற்சி மற்றும் மேற்பார்வையில், பயிற்சி பெற்ற, மூன்று இளைஞர்கள் உட்பட ஏழு பெண்கள் குழுவாக இணைந்து இப்பணியில் ஈடுபட்டுள்ளனர். இதனால், இவர்களுக்கு நல்ல லாபம் கிடைக்க வாய்ப்புள்ளது. வாழ்வில் புதிய நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளது.

நீலகிரி ஆதிவாசி சங்க ஒருங்கிணைப்பாளர் விஜயா கூறுகையில், ''ஆதிவாசி பெண்கள், இளைஞர்கள், சுய தொழில் மூலம் கூடுதல் வருவாய் ஈட்டும் வகையில், இந்த முயற்சி துவங்கப்பட்டுள்ளது. மேலும், பல கிராமங்களில் இது போன்ற சுய தொழில் துவங்கப்படும். அதற்கான பயிற்சியும் வழங்கப்படும்,'' என்றார்.

இப்பணியில் ஈடுபட்டுள்ள சீதா கூறுகையில்,''சுயமாக வருவாய் ஈட்டும் வகையில், இந்த முயற்சியில் இறங்கியுள்ளோம். 21 நாட்களில் காளான் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு தயாராகி விடும். இதனை விற்பனை செய்வதன் மூலம், வருவாய் ஈட்ட முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது,'' என்றார்.

Scanned by CamScanner

# வெங்காயத்தில் இலைப்பேன் தாக்குதல்

தமிழகத்தில் பல்வேறு இடங்களில் பயிரிடப்பட்ட வெங்காயத்தில் இலைப் பேன் தாக்குதல் இருப்பது வேளாண் அறிவியல் மையம் சார்பில் நடந்த கள ஆய்வில் தெரியவந்துள்ளது.

இலைப்பேனானது வெங்காயத்தை தாக்கி சேதம் விளைவிக்கக்கூடிய மிகவும் முக்கியமான பூச்சியாகும். இந்த பேன்கள் கூட்டமாக இலைகள் மற்றும் இலை உறைகளில் இருந்து கொண்டு சாற்றினை உறிஞ்சும், தாக்கப்பட்ட இலைகள் மீது புள்ளிகள் காணப்படும். இந்த புள்ளிகள் பிறகு வெண்மை நிறத்திட்டுக்களாக மாறும்.

இந்த பூச்சி தாக்குதல் அதிகரிக்கும்போது இலைகள் நுனியிலிருந்து கீழ்நோக்கி கருகிவிடும். கடுமையாக தாக்கப்பட்ட இலைகள் மீது இப்பூச்சியின் கருப்பு நிற கழிவுகள் தென்படும். இதனால் செடியின் வளர்ச்சி பாதிக்கப்படும். சேதம் அதிகரிக்கும் போது 50 முதல் 60 சதவிகிதம் மகசூல் இழப்பு ஏற்படும்.



> “தோட்டங்களை சுத்தமாக வைத்திருப்பதன் மூலம், சீரான இடைவெளியில் களை எடுப்பதன் மூலமும் இலைப்பேனை கட்டுப்படுத்தலாம்.

**பூச்சியின் வாழ்க்கை சுழற்சி**

முதிர்ந்த தாய் பூச்சிகள் வெளிர் மஞ்சள் மற்றும் சாம்பல் நிறத்தில் இறக்கையுடன் தென்படும். இவை தனது முட்டைகளை இளம் குருத்துக்களில் இடும்.

இதன் முட்டையிலிருந்து வெளிவரும் இளம் குஞ்சுகள் வெளிறிய மஞ்சள் நிறத்தில் காணப்படும். முதல் மற்றும் இரண்டாம் பருவ குஞ்சுகள் சுறுசுறுப்பாக இயங்கி இளம் குருத்துக்களை சுரண்டி உண்ணும். கூட்டுப்புழு பருவமானது மண்ணிலும், செடியின் கழுத்து பகுதியிலும் மற்றும் வெங்காய செதில்களுக்கு இடையிலும் மறைந்து தென்படும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

தோட்டங்களை சுத்தமாக வைத்திருப்பதன் மூலம், சீரான இடைவெளியில் களை எடுப்பதன் மூலமும் இலைப்பேனை கட்டுப் படுத்தலாம். இளஞ்செடியின் மீது நீரை வேகமாக தெளித்து இலைப்பேனின் பெருக்கத்தை கட்டுப்படுத்தலாம்.

தெளிப்பு நீர் பாசன முறையையும் கையாளலாம். நீல நிற ஒட்டும் பொறியினை ஏக்கருக்கு ஐந்து என்ற எண்ணிக்கையில் வைத்து பூச்சியின் நடமாட்டத்தை கண்காணிக்கலாம். வெங்காயம் பயிரிட்ட தோட்டங்களுக்கு அருகில் பூண்டு, பருத்தி, தக்காளி, வெள்ளரி, பூசணி வகை காய்கறிகள் பயிரிடுவதை தவிர்த்தல் சிறந்தது.

வெங்காயம் பயிரிடவுள்ள தோட்டங்களை சுற்றி மக்காச்சோளத்தினை தடுப்பு பயிராக பயிரிடலாம் என மதுரை வேளாண் அறிவியல் மையத்தின் விஞ்ஞானிகள் உஷாராணி, மனோன்மணி தெரிவிக்கின்றனர்.

**– முனைவர் சீ.சுரேஷ்**
**முதல்வர்**
**வேளாண் அறிவியல் நிலையம், மதுரை.**

Scanned by CamScanner



■ பந்தலூர் அருகே, சேரம்பாடி வனப்பகுதியில் பார்வையாளர்களை வசீகரிக்கும் மலைநாயுருவி.

Scanned by CamScanner

# தென்னைக்கு ஊட்டச்சத்து டானிக்

தென்னையில் 'குரும்பைக் கொட்டுதல்' பாரம்பரிய குணம். தென்னையில் ஒரு குலையில் 40 முதல் 50 வரை குரும்பைகள் தோன்றினாலும் குறைந்த அளவே தேங்காய்களாக மாறுகின்றன. மற்றவை உதிர்ந்து விடுகின்றன. அதிக குரும்பைகள் கொட்டுவதற்கு வறட்சி, மோசமான தட்பவெப்பநிலை, ஊட்டச்சத்து குறைவு, ஹார்மோன்கள் எனப்படும் வளர்ச்சி ஊக்கிகள், மண்ணின் களர் உவர் தன்மைகள், மகரந்தச் சேர்க்கைக்குறை, பூச்சி நோய் தாக்குதல் ஆகியவை முக்கிய காரணங்களாகும். இவைகளில் நுண்ணூட்டச்சத்துக்கள் மற்றும் வளர்ச்சி ஊக்கிகளின் பற்றாக்குறைகளை வேர் மூலம் தென்னை ஊட்டச்சத்து டானிக் செலுத்துவதால் நிவர்த்தி செய்து விடலாம்.



காய்த்துக் குலுங்கும் தென்னை

## ஊட்டச்சத்து டானிக் அவசியம்

தென்னை ஊட்டச்சத்து என்பது தென்னைக்கு வேர்மூலம் ஊட்டுவதற்கு உகந்ததாகும். இந்த தென்னை ஊட்ட மருந்தில் நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம், மக்னீசியம், இரும்பு, துத்தநாகம், தாமிரம், மாங்கனீசு, போரான் மற்றும் மாலிப்டினம் போன்ற ஊட்டச்சத்துக்கள் உள்ளன. இத்துடன் மரத்துக்கு தேவையான ஆக்ஸின், சாலிசிலிக் அமிலம் மற்றும் அஸ்கார்பிக் அமிலம் போன்ற வளர்ச்சி ஊக்கிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

மரத்தின் கார அமில நிலைக்கேற்ப டானிக்கின் கார அமில நிலையும் அமையுமாறு டானிக் தயார் செய்யப்படுகிறது. இதனால் டானிக் மரத்திற்குள் சென்று மரத்தின் உயிர் வேதியியல் செயல்பாடுகளில் சேதம் விளைவிக்காமல், மரத்திற்குத் தேவையான ஊட்டச்சத்துக்களையும், வளர்ச்சி ஊக்கிகளையும் சேதாரம் இன்றி தருகிறது.

எனவே மரத்திற்கு தேவையான நுண்ணூட்டச் சத்துக்களை சரியான விகிதத்தில் நேரடியாக மரத்திற்குள் செலுத்த முடிகிறது. மேலும் மரத்தில் நோய், பூச்சி தாக்குதல் மற்றும் வறட்சி ஆகியவற்றிற்கு இயற்கையான எதிர்ப்பு சக்தியும் அதிகரிக்கிறது.

## வேர் மூலம் ஊட்டச்சத்து

மரத்திலிருந்து இரண்டு முதல் மூன்று அடி தள்ளி சுமார் நான்கு அங்குல ஆழத்திற்கு கீழ் உறிஞ்சும் வேர்கள் அமைந்திருக்கும். இந்த பகுதியில் பென்சில் கனமுள்ள மஞ்சள் நிற வேர் ஒன்றை தேர்வு செய்ய வேண்டும். பின் வேரின் நுனியை மட்டும் கத்தி அல்லது பிளேடு உபயோகித்து சாய்வாக சீவி விடவும். பின் டானிக் உள்ள பையின் அடிவரை வேரை நுழைத்து, வேரையும் பையின் மேல் பாகத்தையும் நூலால் கட்டி விடவும்.

மண்ணில் ஈரத்தன்மை குறைவாக இருந்தால் ஒரு மணி நேரத்தில் டானிக்கை வேர் உறிஞ்சிவிடும். ஆறு மாதத்திற்கு ஒருமுறை செலுத்த வேண்டும். ஒரு மரத்திற்கு 200 மில்லி டானிக் தேவைப்படும். ஊட்டச்சத்து டானிக் அளிப்பதன் மூலம் முக்கியமான சத்துக்கள் சரியான விகிதத்தில் கிடைக்கின்றன.

இலைகளில் பச்சையம் அதிகரித்து, ஒளிச்சேர்க்கை மேம்படுவதால் மரத்தின் வளர்ச்சி அதிகரிக்கிறது. உயிர் வேதியியல் பணிகளுக்கு தேவைப்படும் மூலப்பொருட்களான ஊட்டச்சத்துக்கள் தடையின்றி கிடைப்பதால் மரத்தின் வீரியம் அதிகரிக்கின்றது.

போரான் மற்றும் துத்தநாகம் போன்ற நுண்ணூட்டச் சத்துக்களும், ஆக்ஸின் போன்ற வளர்ச்சி ஊக்கியும் டானிக்கில் உள்ளதால் குரும்பைகள் உதிர்வதும், ஒல்லிக் காய்கள் உற்பத்தியாவதும் வெகுவாக குறைகின்றது. பூச்சி, நோய், வறட்சி, தட்பவெப்ப நிலைகளால் ஏற்படும் பாதிப்புகளுக்கு இயற்கையான எதிர்ப்புச்சக்தி மரத்தில் உருவா கிறது.

தென்னை ஊட்டச்சத்து தேவை மற்றும் விபரங்களுக்கு 'பேராசிரியர் மற்றும் தலைவர் விதை அறிவியல் மற்றும் நுட்பவியல் துறை வேளாண்மை கல்லூரி மதுரை அல்லது விதை அறிவியல் மற்றும் நுட்பவியல் துறை தமிழ்நாடு வேளாண்மை பல்கலை, கோவை' என் முகவரியில் அணுகலாம்.

- ந.ஜெயரா
முன்னாள் துணை இயக்குந
நீர் மேலாண்மை
பயிற்சி நிலைய

Scanned by CamScanner

# உற்சாகம் தரும் ஏலக்காய்



ஏலக்காய் என்ற உயர்தர வாசனை பொருளை 'கார்டமம்' என ஆங்கிலத்தில் குறிப்பிடுவர். இச்சொலின் மூலாதாரம் கிரேக்க மொழி என கூறுவதுண்டு. பாமர நடையில் ஏலக்காயம் என வழங்கப்படுகின்ற சொல்லுக்கு ஏலம், ஆஞ்சி, துடி, கோரங்கம் என்ற பெயர்களும் இலக்கியங்களில் உள்ளன. இந்தியாவில் மொழிகள் அனைத்திலும் 'ஏலா' என்ற பதத்தின் அடிப்படையில் இது புழக்கத்தில் உள்ளது. குளிர்ச்சி நிறைந்த மலைப் பிரதேசங்களில் ஏலச்செடி பயிரிடப்படுகிறது. இதன் உயரம் ஒன்பது அடிகள் வரை இருக்கும். இலைகள் இரண்டு அங்குலம் வரை நீளம் கொண்டது. பூக்கள் தனித்தனியாகவே பூத்துக் குலுங்கும். ஏலக்காயின் உள்ளே ஏலரசி என்ற விதைகள் காணப்படும். ஏலச்செடி நன்றாக முளைத்து செழிப்பாக வளர்ந்து காய்கள் உண்டாவதற்கு ஏறத்தாழ நான்கு ஆண்டுகள் ஆகும்.

### ஏலம் ரகங்கள்

ஏலக்காயில் சிறு ஏலம், பெரிய ஏலம், மலை ஏலம், காட்டு ஏலம் ஆகிய ரகங்கள் உள்ளன. தென்னிந்தியாவில் சிறு ஏலமும், வட இந்தியாவில் பெரிய ஏலமும் பிரசித்தமாக உள்ளன. நறுமண ஏலக்காயின் இயற்கை வளத்திற்காக ஏலக்காய் வாரியம் (கார்டமம் போர்டு) என்ற அரசு நிறுவனம் உண்டாக்கப்பட்டது. 1987 ல் ஏலக்காய் வாரியம் என்ற அரசு நிறுவனமும், வாசனை பண்டங்களின் ஏற்றுமதி வளர்ச்சிக்கான ஆலோசனை சபை (ஸ்பைசஸ் எக்ஸ்போர்ட் புரமோஷன் கவுன்சில்) என்ற நிறுவனமும் இணைக்கப்பட்டு, வாசனை பண்டங்களின் வாரியம் (ஸ்பைசஸ் போர்டு) உருவானது. மிளகின் உற்பத்தியும், ஏற்றுமதியும் மிக அதிக அளவில் இருந்த போதிலும், எப்போதும் போல் ஏலக்காய் உற்பத்திக்கு இந்த புதிய வாரியம் அதிக கவனம் செலுத்தி வருகிறது.



### விஞ்ஞான ஆய்வு

ஏலக்காயின் தொடர்பில் நாற்றங்கால் பராமரிப்பு, தோட்டப் பராமரிப்பு, பூச்சி நிர்வாகம், நோய் நிர்வாகம், அறுவடை ஆகிய பல விஷயங்களில் ஸ்பைசஸ் போர்டு கவனம் செலுத்தி வருகின்றது. 1960ம் ஆண்டு தொடங்கி 60 ஆண்டுகளாக ஏலக்காய் தொடர்பில் அரசு சார்ந்த நிறுவனங்கள் ஈடுபட்டு வருகின்றன. ஏலக்காயில் மிக எளிதில் ஆவியாகக்கூடிய அரிய எண்ணெய்கள் அடங்கியுள்ளன.

அவை கேம்பர், பைனின், போர்னியோஸ், கார்வோன், ஹியமுவீன், கேரியோபில்லென், கேபினின், டெர்பினின், யூகோலிப்டோல் ஆகியனவாகும். இவற்றில் மருத்துவக் குணங்கள் இடம் பெற்றுள்ளன. ஏலக்காயில் உள்ள விசேஷ 'வாலட்டைல்' எண்ணெய், இதன் நறுமணத்திற்கு முக்கிய காரணமாகும். இந்த எண்ணெய்யில் உள்ள காரமான குணம் வயிற்றுப் பொருமலைக் குணமாக்குகிறது. ஏலக்காய் சேர்ந்த உணவும், உணவு பண்டமும் மணக்கும், ருசிக்கும், உள்ளம் ரசிக்கும், உடம்பு நன்கு உறுதிப்படும்.

– எஸ்.நாகரத்தினம்
முன்னோடி விவசாயி
விருதுநகர்.

Scanned by CamScanner

# உரம், பூச்சி மருந்து, விதை விற்பனை கடைகள் திறக்கவும் படிப்பு வந்தாச்சு

கோவை வேளாண் பல்கலை



விவசாயம் நவீன மயமாகி வருகிறது. தமிழ்நாட்டில் விவசாய நிலம் குறைந்து விட்டாலும் நவீன உத்திகள், பாசன முறைகள், உரங்களால் உற்பத்தி பல மடங்கு அதிகரித்து விட்டது.

உரம், பூச்சி மருந்து, நாற்றுகள், சான்றிட்ட விதைகள், மாடித்தோட்ட சாதனங்கள் என ஏராளமான பொருட்களை விற்கும் கடைகள் அதிகரித்து வருகின்றன. மருந்தகம் என்றால் டி.பார்ம் (பார்மஸி படிப்பு) படித்தவர் கட்டாயம் என விதிமுறை உள்ளதோ, அதுபோல் உரம், பூச்சி மருந்து கடைக்கும் அரசு புதிய விதிமுறைகளை வகுத்துள்ளது.

## அரசின் விதிமுறை

மத்திய அரசு உரம், பூச்சி மருந்து கடை வைக்க பி.எஸ்ஸி., (விவசாயம்), டிப்ளமோ, சான்றிதழ் என பல படிப்புக்களில் ஏதாவது ஒன்றை முடித்திருப்பது கட்டாயம்.

இப்படிப்புக்கள் தமிழ்நாடு வேளாண் பல்கலையின் அஞ்சல் வழிக் கல்வி, திருச்சி பாரதிதாசன் பல்கலையின் தொழில் முனைவோர் மேம்பாட்டு இன்ஸ்டிடியூட், வேளாண் அறிவியல் மையங்கள், தனியார் விவசாய கல்லூரிகளில் கற்பிக்கப் படுகிறது.

தற்போது இவ்வணிகத்தில் இருப்பவர்கள் 30 முதல் 70 வயது வரை உள்ளவர்களாக உள்ளனர். அவர்களுக்கு பயன் தரும் வகையில் 'டிப்ளமோ இன் அக்ரிகல்சுரல் இம்புட்ஸ் டிரேடிங்' (டி.ஏ.ஐ.டி.) எனும் படிப்பை அண்ணாமலைப் பல்கலை உருவாக்கியுள்ளது.

யாரும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் வியாபார சம்பந்தமான விபரங்கள், வியாபாரத்திற்கு தேவையான அத்யாவசிய கட்டடங்கள் அடங்கிய எளிய பாடங்களால் நடத்தப்படும்.


## 2017 முதல் அமல்

ஓராண்டு படிப்பான இதனை 2017ம் கல்வியாண்டு முதல் பல நிறுவனங்கள் அங்கீகாரம் பெற்று நடத்துகின்றன. இவ்வகுப்புக்கள் சனி, ஞாயிறுகளில் நடத்தப்படுகிறது. நேர்முகப்பயிற்சியும், கள ஆய்வும் உண்டு. ஆண்டு இறுதியில் தேர்வு நடத்தப்பட்டு பல்கலை சார்பில் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

இதுபோன்ற பல பட்ட, சான்று, பட்டயப் படிப்புக்கள் தோட்டக்கலை உதவியாளர் படிப்புக்கள் பற்றிய அறிய www.tnhorticulture.govt.in, www.tnau.ac.in/ta.agritech, www.annamalaiuniversity.ac.in, www.kvksintamilnadu.com ல் தொடர்பு கொண்டு விபரம் அறியலாம்.

– எம்.ஞானசேகர்
தொழில் மற்றும் விவசாய
ஆலோசகர், சென்னை.
98416 55629

Scanned by CamScanner



• வால்பாறையில் கவாத்து வெட்டப்பட்ட பின், தேயிலை செடி வளர்ச்சிக்கு மருந்து தெளிக்கும் பணி தீவிரமாக நடக்கிறது.

# தேயிலை தோட்டங்களில் 'கவாத்து' பணி தீவிரம்

## மகசூலை அதிகரிக்க ஆர்வம்

**வால்பாறை, அக். 1–**

வால்பாறையில், பருவ மழை இடைவெளி விட்டுள்ளதால், தேயிலைச்செடிகளுக்கு கவாத்து செய்து, மருந்து தெளிக்கும் பணிகள் தீவிரமடைந்துள்ளன.

கோவை மாவட்டம் வால்பாறையில், 13 ஆயிரம் ஏக்கரில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது. கடந்த சில வாரங்களாக, மலைப் பகுதியில், பருவமழை தீவிரமாக பெய்தது.

தற்போது, மழை குறைந்துள்ளதால், தேயிலை செடிகளை பல்வேறு நோய்களிலிருந்து பாதுகாக்கும் வகையில், செடிகளுக்கு 'கவாத்து' வெட்டும் பணி தீவிரமடைந்துள்ளது. பல ஆண்டுகளுக்கு முன்பு, நடவு செய்யப்பட்டது மற்றும் உயரமாக வளரும் செடிகளில், மகசூல் குறையும் வாய்ப்புள்ளது. எனவே, செடிகளுக்கு 'கவாத்து' செய்யப்படுகிறது.

உபாசி தேயிலை ஆராய்ச்சியாளர்களிடம் கேட்ட போது, 'தேயிலை செடிகளுக்கு கவாத்து வெட்டும் பணி முடிந்தவுடன், அதன் மீது சுண்ணாம்பு தெளிக்கப்படுகிறது. மேலும் தண்டுதுளைப்பான் நோய் தாக்குதலில், இருந்து செடிகளை பாதுகாக்க பூச்சி மருந்துகள் பரிந்துரைக்கப்பட்டு, தெளிக்கப்படுகிறது. கவாத்து வெட்டி, 90 நாட்களுக்கு பின் தேயிலைச்செடிகள் புதியதாக துளிர்விடும்.

இந்த காலகட்டத்தில் செடிகளை கொப்பள நோய் தாக்காமல் இருக்க, 'காப்பர்', 'பிளிஸ்டர்' ஆகிய மருந்துகளை குறிப்பிட்ட இடைவெளியில் தெளிக்க வேண்டும்,' என்றனர்.

Scanned by CamScanner

# நிலத்தில் முடங்கும் கறுப்பு பணம்

## விவசாய உற்பத்திக்கு அபாயம்

**பொங்கலூர், அக். 1–**

சமூக விரோதிகள், லஞ்ச அதிகாரிகள், அரசியல்வாதிகள் உள்ளிட்டோர் வீட்டு மனைகள் மற்றும் விவசாய நிலங்களாக வாங்கி, அதில் பணத்தை பதுக்குகின்றனர்.

திருப்பூர் மாவட்ட பகுதி வேகமாக வளர்ந்து வருவதால், நிலத்தின் மதிப்பும் ஆண்டுக்காண்டு அதிகரித்து வருகிறது. வரி ஏய்ப்பாளர்கள் நிலம், வீட்டு மனைகளை வாங்கி, எதிர்காலத்தில் அதிக விலை கிடைத்தால் விற்பனை செய்ய வசதியாக, அவற்றை சும்மா போட்டு வைத்துள்ளனர்.

அவர்களுக்குப் பணம் பாதுகாப்பாக இருப்பதுடன், அவர்கள் செய்துள்ள முதலீட்டுக்கும் பெருந்தொகை லாபமாக கிடைக்கிறது. விவசாய வருமானம் என்று பொய் கணக்கு காட்டி, அதற்கு வரிச்சலுகையும் பெற்றுவிடுகின்றனர்.

இதனால், உண்மையான விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய வரிச்சலுகை, மின் கட்டண சலுகை போன்றவை சட்டவிரோத கும்பல்களுக்குப் பயன்படுகிறது. முறைகேட்டில் ஈடுபடும் பெரும்பாலான நபர்கள் நிலத்தில் பயிர் சாகுபடி செய்தால், நஷ்டம் வரும் என்பதால், தரிசாக விட்டு வைக்கும் போக்கு அதிகரித்துள்ளது.

மேலும், வீட்டு மனைகள் பிரிக்கப்பட்டு, விற்பனை செய்யும் போது, அவற்றை வாங்கிய நபர் வீடு கட்டுவதில்லை. இதனால், விளை நிலங்கள் சுருங்கி, விவசாய உற்பத்தி குறைகிறது. இது எதிர்காலத்தில் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட வழிவகுக்கும் அபாயம் எழுந்துள்ளது.

கடந்த பத்தாண்டுகளுக்குள் யார் யார் விவசாய நிலம், வீட்டு மனை வாங்கியுள்ளார்கள்; வருங்காலத்தில் இதில் முதலீடு செய்பவர் ஆகியோரின் பின் புலத்தை ஆராய்ந்தால், பல உண்மைகள் வெளிச்சத்துக்கு வரும். புதிதாக நிலம், வீட்டு மனை வாங்குவோரை தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தினால், வரி ஏய்ப்பாளர்கள் வசமாக சிக்குவர்.

வீட்டு மனை வாங்கி, ஆறு மாதத்திற்குள் வீடு கட்டாதவர்களுக்கும், விவசாய நிலங்களை வாங்கி பயிர் சாகுபடி செய்யாமல், சும்மா போட்டு வைத்துள்ளவர்களுக்கும் பசுமை வரி விதிக்கும் சட்டத்தை அரசு கொண்டு வர வேண்டும்; இதனால், முறைகேடாக நிலம் வாங்குவது குறையும்; கறுப்பு பணம் பதுக்கலும் குறைந்து விடும் என்று, சமூக ஆர்வலர்கள் அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளனர்.

Scanned by CamScanner



# மருந்தாகும் வெற்றிலை

தமிழக கிராமங்களில் வெற்றிலை, பாக்கு போடும் பழக்கம் இல்லாத தாத்தா, பாட்டிகளை பார்க்க முடியாது. திருமணம் போன்ற சுப காரியங்களில் வெற்றிலை முக்கிய இடம் பெறுகிறது. நரை, திரை, மூப்பு மற்றும் பல்வேறு நோய்களை நீக்கி உடலை என்றும் நோயின்றி காக்கும் தன்மை கொண்டதை, கற்ப மூலிகைகளை குறிப்பிடுகின்றனர். கற்ப மூலிகையின் தன்மை கொண்ட இலைகளில் வெற்றிலையும் ஒன்றாக இருக்கிறது.

வெற்றிலை பயன்படுத்தும்போது அதன் காம்பு, நுனி, நடுநரம்பு இவற்றை நீக்கி உபயோகிக்க வேண்டும். வெற்றிலை, நோய் எதிர்ப்பு கொண்ட மூலிகை என்று தெரிந்துதான், உணவுக்கு பின் வெற்றிலை போடும் பழக்கத்தை முன்னோர் ஏற்படுத்திக் கொண்டனர்.

இன்றைக்கு இது ஒரு மருத்துவ மூலிகை என்று தெரியாமலேயே பலர் பயன்படுத்தி வருகின்றனர். வெற்றிலையில், நீர்ச்சத்து, புரதச் சத்து, கொழுப்புச் சத்து அதிகம் உள்ளன. இதில் கால்சியம், கரோட்டின், தயமின், ரிபோபிளேவின் மற்றும் வைட்டமின் சி ஆகிய சத்துக்களும் உள்ளன. தற்போதைய ஆராய்ச்சியில், வெற்றிலையில் மிகவும் வீரியமிக்க நோய் எதிர்ப்புத்திறன் கொண்ட சவிக்கால் என்னும் பொருள் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

வெற்றிலையை மென்று சாப்பிடுவதால் மலச்சிக்கல் நீங்கும். நன்கு பசி உண்டாகும். வாய்ப்புண், வயிற்றுப் புண் நீங்கும். வெற்றிலைக்கு நாக இலை என்ற மற்றொரு பெயரும் உண்டு. பாம்பின் விஷத்தைக் கூட மாற்றும் தன்மை கொண்டதால் இதனை நாக இலை என்றும் அழைக்கின்றனர். வெற்றிலைச்சாறு 5 மி.லி.யுடன் இஞ்சி சாறு 5 மி.லி., கலந்து தினமும் காலை வேளையில் வெறும் வயிற்றில் அருந்தி வந்தால் நுரையீரல் சம்பந்தப்பட்ட நோய்கள் நீங்கும்.

இரண்டு தேக்கரண்டி சீரகத்தை, மூன்று தேக்கரண்டி வெண்ணெயை விட்டு நன்கு மை போல் அரைத்து, 5 வெற்றிலை எடுத்து காம்பு, நுனி, நடுநரம்பு நீக்கி வெற்றிலையின் பின்புறத்தில் அந்த கலவையைத் தடவி சட்டியிலிட்டு வதக்கி பின், 100 மி.லி., நீர்விட்டு நன்றாக கொதிக்க வைத்து ஆறிய பின் வடிகட்டி கஷாயத்தை அருந்தி வந்தால் வயிற்றுவலி நீங்கும்.

உடலில் உள்ள விஷத்தன்மையை மாற்ற வெற்றிலை சிறந்த மருந்தாகும். சாதாரணமான வண்டுக்கடி, பூச்சிக்கடி இருந்தால் வெற்றிலையில் நல்ல மிளகு வைத்து மென்று சாறு இறக்கினால் விஷம் எளிதில் இறங்கும். வெற்றிலைச் சாறுடன் கோரோசனை சேர்த்து சாப்பிட்டு வந்தால் தொண்டையில் சளிக் கட்டு, இருமல், மூச்சுத் திணறல் குணமாகும்.

2 அல்லது 3 வெற்றிலை எடுத்து அதனுடன் ஐந்து மிளகு சேர்த்து நீர் விட்டு காய்ச்சி குழந்தைகளுக்கு கொடுத்து வந்தால் சிறுவர்களுக்கு உண்டாகும் செரியாமை நீங்கும். வெற்றிலை 2 எடுத்து நன்றாக கழுவி அதில் சிறிது சீரகத்தையும், உப்பையும் சேர்த்து நன்கு மென்று விழுங்கி வந்தால் அஜீரண கோளாறு நீங்கும்.

100 மில்லி தேங்காய் எண்ணெயில் 5 வெற்றிலையை போட்டு சூடாக்கி வெற்றிலை சிவந்தவுடன் வடிகட்டி பாட்டிலில் அடைத்து வைத்துக்கொண்டு சொறி, சிரங்கு படைக்கு தடவி வந்தால், எளிதில் குணமாகும். வெற்றிலைக்கு மயக்கத்தைப் போக்கும் குணமுண்டு. 3 வெற்றிலைகளை கசக்கி சாறு எடுத்து கிடைக்கும் சாறில் கொஞ்சம் கற்பூரத்தைப் போட்டு நன்றாக குழைத்து, நெற்றிப் பகுதியில் பற்று போட்டால் தலைவலி பறந்து போகும்.

Scanned by CamScanner



▶ நீலகிரி மாவட்டம் ஊட்டி அரசு தாவரவியல் பூங்காவில் உள்ள இத்தாலியன் பூங்காவில் பூத்து குலுங்கும் மேரி கோல்டு மலர்களை ரசிக்கும் சுற்றுலா பயணிகள்.

Scanned by CamScanner

# தென்னைக்கு உயிர் உரமிடல் அவசியம் வேளாண் மாணவர்கள் செயல் விளக்கம்

**பொள்ளாச்சி, அக். 1–**

பொள்ளாச்சியில் கிராமத்தங்கல் பயிற்சி பெறும் கோவை வேளாண் கல்லூரி மாணவர்கள், தென்னைக்கு உயிர் உரமிடுவது குறித்து விவசாயிகளுக்கு செய்முறை விளக்க பயிற்சி அளித்தனர்.

கோவை ராமகிருஷ்ணா மிஷன் கல்லூரி வேளாண் மாணவர்கள், பொள்ளாச்சி தெற்கு ஒன்றியத்தில் கிராமத் தங்கல் திட்டத்தின் கீழ், வேலை அனுபவ பயிற்சி பெறுகின்றனர். தெற்கு வேளாண் துறையினர் வழிகாட்டுகின்றனர்.

பயிற்சி மாணவர்கள் தென்னைக்கு உயிர் உரம் இடுவது குறித்து நஞ்சேகவுண்டன்புதூர் விவசாயிகளுக்கு செய்முறை விளக்க பயிற்சியளித்தனர். வேளாண் அலுவலர்கள் மேற்பார்வையிட்டனர். செய்முறை விளக்கத்தில், தோப்பிலுள்ள தென்னையை சுற்றிலும் குழி பறித்து, அதில் பாஸ்போ பாக்டீரியா உயிர் உரம் இடுவது செய்து காட்டப்பட்டது.

பாஸ்போ பாக்டீரியா ஒரு வகை உயிரி ஆகும். இந்த வகை பாக்டீரியாவை பயிர்களின் வேர்ப்பகுதியில் இடுவதால், அவை மண்ணில் உள்ள பாஸ்பரஸ், பாஸ்பேட் சத்தாக மாற்றி பயிருக்கு தரும்.

விதைகளை பாஸ்போ பாக்டீரியா கலந்து விதை நேர்த்தி செய்வதன் மூலம், பயிர் வளரும் போது நோய் தாக்குவது குறையும்.

தென்னைக்கு பாஸ்போ பாக்டீரியா அளிக்க, மரத்தின் அடிப்பகுதியில் இருந்து இரண்டு அடி தொலைவில் குழி பறிக்க வேண்டும். பென்சில் தடிமனுள்ள வேர்களை பறித்து வெளியில் எடுக்க வேண்டும்.

சாணம் கலந்த குப்பை மண்ணுடன் பாஸ்போ பாக்டீரியாவை கலந்து, வேர்களில் படும்படி இட்டு, மண்ணை மூட வேண்டும். உயிர் உரம் அளிக்கும் போது, ரசாயன உரங்கள், பூச்சி கொல்லிகள் பயன்படுத்தக் கூடாது.

இவ்வாறு பயிற்சியில் தெரிவிக்கப்பட்டது.

வேளாண் மாணவர்கள் ஹரீஷ், கார்த்திகேயன், ரவிசங்கர், சேந்தன், சிரஞ்சீவி மற்றும் விக்னேஷ் பங்கேற்று பயிற்சியளித்தனர்.

Scanned by CamScanner